Complaint preferred to the Police

* 231 Q.—Thiru L. BALARAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a Supervisor of the Electricity Board at Kannamangalam, Vellore taluk of North Arcot district was obstructed from discharging his duties and whether any complaint was preferred to the Police thereon; and

(b) if so, the action taken thereon by the Police Department?

காவல் துறையினரிடம் பிராது

திரு. எல். பலராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், கண்ணமங்கலத்தில் மின்சார வாரிய மேற்பார்வையாளர் ஒருவர், தன் கடமையைச் செய்ய முடியாமல் தடுக்கப்பட்டு, அதன் பேரில் காவல் துறையினருக்குப் பிராது ஏதும் செய்யப்பட்டதா ?

(இ) ஆமெனில், அது குறித்து காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

[பிற்பகல் 4-10]

(இ) இந்த வழக்கு தவறான தகவலின் பேரில் கொடுக்கப்பட்டதாகக் கருதி, இதன்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது கைவிடப்பட்டது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, புகார் கொடுத்தவர் ஒரு அதிகாரி, அப்படி இருக்கும்போது தவறான தகவலின்பேரில் கொடுக்கப்பட்டது என்று சொல்லும் நிலை இருந்தாலும், இப்படி ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அதிகாரிகளும் சரி, உபயோகிப்போர்களும் சரி—நன்கு புரிந்துகொண்டு, இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு வாராத முறையில் அரசு திட்டவட்டமான அறிக்கையை விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அறிக்கை விட வேண்டிய அளவிற்கு இது ஒன்றும் பெரியதொரு விவகாரம் இல்லை. தனிப்பட்ட முறையில், ஒரு மின்வாரிய மேற்பார்வையாளருக்கும், அந்த ஆலைச் சொந்தக்காரருக்கும் ஏற்பட்ட ஒரு தகராறு பற்றிக் கொடுக்கப்பட்ட புகார்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1974 மார்ச் 28]

விசாரித்ததில் அந்த அதிகாரி தடுக்கப்படவில்லை என்றும் இருவரும் சற்றுக் கடுமையான முறையில் வார்த்தைகளை உபயோகித்துக்கொண்டார்கள் என்றும் தெரிய வந்தது. ஆகவே நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்று அது கைவிடப்பட்டது.

Tamil Nadu Police Team at the All India Meet

*232 Q.—THIRU L. BALARAMAN (on behalf of Thiru S. Vellapandian): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Police Team has won distinctions at the All India Meet held at Cuttack during 1973;

(*b*) if so, the details thereof; and

(*c*) the incentives given to the participants of the Meet?

அகில இந்திய விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு காவல் துறைக் குழு

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-ஆம் ஆண்டில், கட்டாக்கில் நடந்த அகில இந்திய விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு காவல் துறைக் குழு சிறப்புப் பரிசுகள் பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அப்போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு எந்தெந்த வகையில் ஊக்கமளிக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம். கட்டாக்கில் நடைபெற்றது பணித்திறமைப் போட்டியாகும்.

(இ) கட்டாக்கில் 27---11---1973 முதல் 2---12---1973 வரை நடைபெற்ற 17-வது அனைத்திந்திய காவல்துறையினர் பணித்திறமைப் போட்டியில் (XVII All India Police Duty Meet.) இடம் பெற்ற நிகழ்ச்சிகள் அனைத்திலும் தமிழ்நாடு காவல்துறை குழுவினர் பங்கெடுத்துக் கொண்டனர். "புலனாய்வில் அறிவியல் சாதனங்கள்" (Scientific Aids. in Investigation) போட்டியில் அவர்கள் தொடர்ந்தாற்போல் ஐந்தாவது ஆண்டாக வெற்றி கண்டு, அதற்கான கோப்பையைத் தக்க வைத்துக் கொண்டனர். "புலனாய்வில்